





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# அமலனாதிபிரான்

*amalanAdhapirAn*

# அமலனாதிபிரான்

தனியன்

**ஸ்ரீ பெரிய நம்பிகள் அருளிச்செய்த**

आपाद् चूडमनुभूय हरिम् शयानं
मध्ये कवेर दुहितुर् मुदितान्तरात्मा।
अद्रुष्ट्रूतां नयनयोर् विशयान्तराणां
यो निश्चिकाय मनवै मुनिवाहनं तम्॥

**ஸ்ரீ திருமலை நம்பிகள் அருளிச்செய்த**

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடையுந்தி
தேட்டரும் உதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே

**ஸ்ரீ திருப்பாண் ஆழ்வார் அருளிச்செய்த**

***அமலன் ஆதிபிரான்***
***அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன்***
***விண்ணவர் கோன்***
***விரையார் பொழில் வேங்கடவன்***
***நிமலன் நின்மலன் நீதி வானவன்***
***நீள் மதிள் அரங்கத்தம்மான்***
***திருக்கமல பாதம் வந்து***
***என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே*** [1] [0927]

உவந்த உள்ளத்தனாய்
உலகம் அளந்தண்டம் உற
நிவந்த நீள் முடியன்
அன்று நேர்ந்த நிசாசரரை
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்
கடியார் பொழில் அரங்கத்தம்மான்
அரைச் சிவந்த ஆடையின் மேல்
சென்றதாம் என சிந்தனையே [2] [0928]

# அமலனாதிபிரான்

*மந்தி பாய்*
*வட வேங்கட மா மலை*
*வானவர்கள் சந்தி செய்ய நின்றான்*
*அரங்கத்தரவின் ஆணையான்*
*அந்தி போல் நிறத்தாடையும்*
*அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில்*
*உந்தி மேல் அது அன்றோ*
*அடியேன் உள்ளத்தின் உயிரே* [3] [0929]

சதுர மா மதிள் சூழ் இலங்கைக்கு இறைவன்
தலை பத்து உதிர ஓட்டி
ஓர் வெங்கணை உய்த்தவன்
ஓத வண்ணன்
மதுர மா வண்டு பாட
மா மயில் ஆடரங்கத்தம்மான்
திரு வயிற்று உதரபந்தம்
என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே [4] [0930]

பாரம் ஆய
பழவினை பற்று அறுத்து
என்னைத் தன் வாரம் ஆக்கி வைத்தான்
வைத்தது அன்றி என்னுள் புகுந்தான்
கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன்
அரங்கத்தம்மான்
திரு ஆர மார்வு அது அன்றோ
அடியேனை ஆட்கோண்டதே [5] [0931]

துண்ட வெண் பிறையான்
துயர் தீர்த்தவன்
அஞ்சிறைய வண்டு வாழ் பொழில் சூழ்
அரங்க நகர் மேய அப்பன்
அண்டர் அண்ட பகிரண்டத்து
ஒரு மாநிலம் எழுமால் வரை
முற்றும் உண்ட கண்டம் கண்டீர்
அடியேனை உய்யக்கொண்டதே [6] [0932]

# அமலனாதிபிரான்

கையின் ஆர்
    சுரி சங்கனல் ஆழியர்
நீள்வரை போல் மெய்யனார்
    துளப விரையார் கமழ் நீள் முடி எம் ஐயனார்
அணி அரங்கனார்
    அரவின் அணைமிசை மேய மாயனார்
செய்ய வாய் ஐயோ
    என்னைச் சிந்தை கவர்ந்ததுவே [7] [0933]

பரியன் ஆகி வந்த
    அவுணன் உடல் கீண்ட
அமரர்க்கு அரிய ஆதிபிரான்
    அரங்கத்தமலன் முகத்து
கரிய ஆகிப் புடை பரந்து
    மிளிர்ந்து செவ்வரி ஓடி
நீண்ட அப்பெரிய வாய கண்கள்
    என்னைப் பேதைமை செய்தனவே [8] [0934]

*ஆலமா மரத்தின் இலைமேல்*
    *ஒரு பாலகனாய்*
*ஞாலம் ஏழும் உண்டான்*
    *அரங்கத்தரவின் அணையான்*
*கோலமா மணி ஆரமும்*
    *முத்துத் தாமமும் முடிவில்லதோர் எழில்*
*நீல மேனி ஐயோ*
    *நிறை கொண்டதென் நெஞ்சினையே* [9] [0935]

*கொண்டல் வண்ணனைக்*
    *கோவலனாய் வெண்ணெய்*
*உண்ட வாயன்*
    *என் உள்ளம் கவர்ந்தானை*
*அண்டர் கோன்*
    *அணி அரங்கன்*
*என் அமுதினைக் கண்ட கண்கள்*
    *மற்று ஒன்றினைக் காணாவே* [10] [0936]